## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை – 2024–2025 –ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – முதல் முறையாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/- ஹஜ் மானியம் வழங்க – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை**

**அரசாணை (நிலை) எண். 72**

**நாள் 03.09.2024**
**குரோதி , ஆவணி – 18**
**திருவள்ளுவர் ஆண்டு 2055**
**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.37, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (எஸ்1) துறை, நாள் 24.07.2018.
2. அரசாணை (நிலை) எண்.36, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (எஸ்1) துறை, நாள் 30.05.2023.
3. அரசாணை (நிலை) எண்.44, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (எஸ்1) துறை, நாள் 15.05.2024.
4. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலரின் கடித.எண். 313/ஹ.கு/2024, நாள் 28.06.2024.

******

**ஆணை:–**

2024–2025–ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களால் "முதல் முறையாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 25 ஆயிரம் மானியம் வழங்கப்படும். இச்செலவினம் ஹஜ் புனிதப் பயணத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் 10 கோடி ரூபாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. பார்வை 4-ல் படிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலர் அவர்களின் கடிதத்தின் மூலம் பெறப்பட்ட கருத்துருவில், தமிழ்நாடு மாநில ஹஜ் மூலம் முதன் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் புனிதப் பயணிகளுக்கு அரசின் ஹஜ் மானியம் வழங்கும் திட்டம் மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் துவக்கி வைக்கப்பட்டு ரூ.6.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது என்றும், இத்தொகையானது பயணிகளின் வங்கிக் கணக்கில் இணைய வங்கி சேவை மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஹஜ் பயணிகளுக்கு வழங்கப்பட்டு வந்த அரசின் மானியத் தொகையானது ரூ.6.00 கோடியிலிருந்து ரூ.10.00 கோடியாக உயர்த்தி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டு பயணிகளுக்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஹஜ் 2024-ஆம் ஆண்டு புனித ஹஜ் பயணம் மேற்கொண்ட பயணிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட அரசின் மானியத் தொகையான ரூ.10.00 கோடி பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

4. மேலே பத்தி 1-ல் உள்ள அறிவிப்புக்கு இணங்க முதன்முறையாக தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் புனித பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/- ஹஜ் மானியத் தொகை வழங்கும் பொருட்டு உரிய ஆணைகளை வெளியிடுமாறு தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்காணும் 2024-2025-ஆம் ஆண்டிற்கான அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று முதல் முறையாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/- ஹஜ் மானியம் வழங்க அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த 4000 ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் புனிதப் பயணத்திற்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் ரூ.10.00 கோடி நிதியிலிருந்து செலவிடுமாறும், 4,000-க்கும் மேற்பட்டோர் ஹஜ் புனிதப்பயணம் மேற்கொள்ளும் நிலையில் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கு RE/FMA-ல் நிதி ஒப்பளிப்பு வழங்க உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்புமாறும் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை முறையே அதன் அலுவல் சார்பற்ற எண்.7757953/நிதி (பி.மி.பி.(ம)சி.ந)/2024, குறிப்பு #36, நாள்27.08.2024-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

சா. விஜயராஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
செயலாளர் மற்றும் செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஹஜ் குழு,
சென்னை-34.
பிரிவு அலுவலர் (பட்டியல்), பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
சென்னை-9.
சம்பள கணக்கு அலுவலர்,
தலைமைச்செயலகம்,சென்னை-9.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர்(தணிக்கை-I&II), சென்னை-18.
நகல் :-
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
நிதி (பி,மிபி (ம) சி.ந)த்துறை, சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பி.ந.III/ட்டி) த்துறை
இருப்புக்கோப்பு / உபரிநகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

03/09/2024
பிரிவு அலுவலர்
03/09/24